# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 2259 / 2010 / எம்சி. 8 நாள் : 6.3.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 12.03.2010 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்
## மார்ச் 2010

### நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் கட்டணத்தை ஒரே சீராக நிர்ணயித்தல் - அரசு ஆணை வெளியிடப்பட்டது – பதிவு செய்தல் -தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி - 4 இடங்களில் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி - 4 இடங்களில் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி - 6 இடங்களில் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி - 6 இடங்களில் பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 6 | நகரமைப்புப் பிரிவு - புலியகுளம் மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்புகள் - குடியிருப்பவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 7 | கல்விப் பிரிவு - வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் மாநகராட்சி பள்ளிகளுக்கு வாடகை வழங்குதல் மற்றும் ஆரம்பப் பள்ளியை இணைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 8 | **Jnnurm –** பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - புள்ளி விபர தொகுப்புகை பணி செய்தல் - மதிப்பீடு ரூ. 600 இலட்சம் - மாநகராட்சி பங்கு நிதி செலவழித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | **Jnnurm –** பில்லூர் II ம் குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் - துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டுதல் மற்றும் உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகரிப்புக் கிணறு அமைத்தல்- மதிப்பீடு ரூ. 569 இலட்சம் - மாநகராட்சி பங்கு நிதி செலவழித்தல் மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 10 | **Jnnurm –** பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - 900/1000 விட்டமுள்ள MS/D1 குழாய் பதித்தல் - மதிப்பீடு ரூ. 700 இலட்சம் - மாநகராட்சி பங்கு நிதி செலவழித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 11 | **Jnnurm –** பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் II – மண்டலங்கள் III மற்றும் VII – கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் அமைத்தல் - கூடுதல் செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி – அவினாசி சாலையில் 275 மின் கம்பங்கள் மற்றும் 8 உயர்மட்ட மின்கோபுரங்கள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி – திருச்சி சாலையில் 151 மின் கம்பங்கள் மற்றும் 8 உயர்மட்ட மின்கோபுரங்கள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக**
**நினைப்பானை நீங்குந் திரு.**

(குறள் -519)

**விளக்கம்**

**எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவரின் உறவைத் தவறாக எண்ணுபவரை விட்டுப் பெருமை அகன்று விடும்.**

திருவள்ளுவர்.

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர்புர உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டப் பணிகளுக்கான நூற்று வீதக் கட்டணம் ஒரே சீராக இல்லாமல் திட்டங்களின் அடிப்படையில் நூற்று வீதக் கட்டணம் பல்வேறு வகையாக வசூலிக்கப்பட்டு வருவதை மாற்றியமைத்து நகர்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் ஒரே சீராக 5% நூற்று வீதக் கட்டணம் கட்டணத்தை நிர்ணயித்து, நிர்வாக ஒப்புதல் பெறும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (குவ 4) துறையின் அரசாணை (நிலை) எண் 34 நாள் 15.02.2010ன் மூலம் பிறப்பித்துள்ள ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அரசாணையை மாமன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண். 11844/2008/ஜே.எண். 4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.261 நாள்.12.03.2010</u>**

**அரசாணை (நிலை) எண்.34 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ..4) துறை நாள்.15.02.2010 பதிவு செய்யப்பட்டது.**

---

## பொருள் எண் 2

<u>உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்</u>

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.27-ல் தற்பொழுது புதிதாக அகலப்படுத்தப்பட்டுள்ள அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் இல்லாததால் கீழ்கண்ட இடங்களில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.28.40 இலட்சத்திற்கு பணிக்குழு தனது தீர்மான எண்.451 நாள்: 21-01-2010-அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

1. உப்பிலிபாளையம் காவலர் குடியிருப்பு
2. உப்பிலிபாளையம் காவலர் குடியிருப்பு எதிர்புறம்
3. ரங்கம்மாள் உயர்நிலை பள்ளி அருகில்
4. ஸ்டேன்ஸ் பள்ளி அருகில்

மேற்கண்ட இப்பகுதிகளில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைக்க 23-02-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியத்தில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை-
   1.13% மதிப்பீட்டிற்கு அதிகம்

பெறப்பட்ட இந்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் 05.03.2010-ல் பரிசீலிக்கப்பட்டு இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 1.13% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் அதிக மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 567/2010/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.262 நாள்.12.3.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது**

---

## பொருள் எண் 3

உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.19 மற்றும் 26-ல் தற்பொழுது புதிதாக அகலப்படுத்தப்பட்டுள்ள அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் இல்லாததால் கீழ்கண்ட இடங்களில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.30.50 இலட்சத்திற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.16 நாள்: 22-01-2010-அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

1. ரத்தினா ரீஜன்ட் அருகில்
2. **G.K.N.M** மருந்துவமனை அருகில் உள்ள பெட்ரோல் பங்க்
3. லட்சுமி மில்ஸ் பேருந்து நிறுத்தம் சந்திரா ஹுண்டாய் அருகில்
4. லட்சுமி மில்ஸ் பேருந்து நிறுத்தம்

மேற்கண்ட இப்பகுதிகளில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைக்க 23-02-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. தி/ள். ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை- 1.04% மதிப்பீட்டிற்கு அதிகம்

பெறப்பட்ட இந்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் 05.03.2010-ல் பரிசீலிக்கப்பட்டு இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 1.04% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் அதிக மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 426/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண்.263 நாள்.12.3.2010**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது**

---

## பொருள் எண் 4

உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.1,2 மற்றும் 3-ல் தற்பொழுது புதிதாக அகலப்படுத்தப்பட்டுள்ள அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் இல்லாததால் கீழ்கண்ட இடங்களில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.43.53 இலட்சத்திற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.15 நாள்: 22-01-2010-அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

1. ராதாகிருஷ்ணா மில் பீளமேடு
2. டாக்டர் ஜெகநாதன் நகர்
3. கோயம்புத்தூர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி
4. அரசினர் பாலிடெக்னிக்
5. சுகுணா கல்யாண மண்டபம்
6. ஹோப்ஸ் காலேஜ் (ஆர்கஸ் நகர்)

மேற்கண்ட இப்பகுதிகளில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைக்க 23-02-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை- 1.04% மதிப்பீட்டிற்கு அதிகம்

பெறப்பட்ட இந்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் 05.03.2010-ல் பரிசீலிக்கப்பட்டு இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 1.04% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் அதிக மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம். ந.க.எண் : 427/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண்.264 நாள்.12.3.2010**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

## பொருள் எண் 5

உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.2 மற்றும் 3-ல் தற்பொழுது புதிதாக அகலப்படுத்தப்பட்டுள்ள அவினாசி சாலையில் பேருந்து நிழற்குடைகள் இல்லாததால் கீழ்கண்ட இடங்களில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.43.53 இலட்சத்திற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.14 நாள்: 22-01-2010-அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

1. பி.எஸ்.ஜி பொறியியல் கல்லூரி
2. திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ்
3. கோவை மருந்துவ கல்லூரி
4. ஜென்னி ரெசிடென்சி
5. ஜி.கே.டி பள்ளி
6. ஹோப் காலேஜ் பெட்ரோல் பங்க்

மேற்கண்ட இப்பகுதிகளில் புதிதாக பேருந்து நிழற்குடைகள் அமைக்க 23-02-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. தி/ள். ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸடீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை- 1.03% மதிப்பீட்டிற்கு அதிகம்.

பெறப்பட்ட இந்த ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் 05.03.2010-ல் பரிசீலிக்கப்பட்டு இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 1.03% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள்.ஸ்ரீவத்சா ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் அதிக மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம். ந.க.எண்: 428/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண்.265 நாள்.12.3.2010**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது**

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – புலியகுளம் ரெட்பீல்ட்ஸ் ரோட்டில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான 14 குடியிருப்புகளில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் மாநகராட்சி கடைநிலை ஊழியர்களின் குடியிருப்புகளை அரசாணை எண்.1542 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 12.10.1983-ல் தற்போதைய சந்தை விலை அடிப்படையில் நில மதிப்பு மற்றும் கட்டிடத்தின் மதிப்பினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் ஆகியோர் நிர்ணயம் செய்து 14 குடியிருப்புகளையும் அதில் குடியிருந்து வரும் அடிப்படை ஊழியர்களுக்கே விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

இதன்பேரில் நில மதிப்பு மற்றும், இட மதிப்பு நிர்ணயம் செய்து புலியகுளம் ரெட்பீல்ட்ஸ் சாலைகளில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான 14 குடியிருப்பிகளில் ஒதுக்கீட்டாளர்களுக்கு 5 குடியிருப்புகளும், ஒதுக்கீட்டாளரின் வாரிசுதாரர்கள் 8 பேருக்கு இறந்த ஒதுக்கீட்டாளரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், நோட்டரி பப்ளிக் மூலம் தெரிவித்துள்ள ஆட்சேபணை சான்று மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களின் சட்ட கருத்து பெற்று 8 குடியிருப்புகளும், நிலமதிப்பு மற்றும் கட்டிட தொகையினை முழுமையாக வசூலித்த பின்னர் கிரையம் செய்து கொடுக்கவும், ஓதுக்கீட்டாளர் மற்றும் ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்களின் சொந்த செலவில் கிரையம் செய்து கொடுக்கவும், இவர்களைத் தவிர ஒதுக்கீட்டாளர் திரு. சாமியப்பன், (குடியிருப்பு கதவு எண்.94) என்பவர் காலமாகிவிட்டதாலும், அவரது வாரிசுதாரர்கள் எவரும் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்பதாலும், உரிய சான்றிதழ்கள் அளிக்கும்பட்சத்தில் இவரது வாரிசுகள் தொகை முழுவதும் செலுத்திய பின்னர் கிரையம் செய்யவும், மாநகர மாமன்ற தீர்மான எண்.4 நாள் 28.04.2008-ல் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி குடியிருப்புகளை கிரையம் செய்வது குறித்து முத்திரை தீர்வை சலுகை வழங்க கோரியதன்பேரில் ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுதாரர்களின் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

தற்போது திரு. சாமியப்பன் அவர்களது வாரிசுதாரர்களான (1). திரு.எஸ். குணசேகரன் (மகன்). (2). திரு.சாமிதுரை (மகன்). (3). திருமதி. சுசீலா (மகள்) ஆகிய மூவரும் உரிய சான்றுகள் வழங்கி விண்ணப்பம் செய்துள்ளதன்பேரில், மாநகராட்சி வழக்கறிஞர் மேற்கண்ட 3 வாரிசுகளுக்கு குடியிருப்பினை உரிமை மாற்றம் செய்து வழங்கலாம் என்று 07.07.2008-ல் சட்ட கருத்துரை வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி குடியிருப்பு கதவு எண்.94-ஐ காலமான ஒதுக்கீட்டாளர் திரு. சாமியப்பன் அவர்களின் வாரிசுதாரர்கள் நிலமதிப்பு மற்றும் கட்டிடத்தின் மதிப்புத் தொகை முழுவதும் மாநகராட்சிக்கு செலுத்திய பின்னர் குடியிருப்பினை கிரையம் செய்து வழங்கவும், கிரைய செலவுகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவர்களே சொந்த செலவில் செலுத்தும்படியும் கோர மாநகர மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 5795/1983/கிஎச்.1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.266 நாள்.12.3.2010</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குடியிருப்பினை பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் கிரையம் செய்து வழங்க அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது

---

## பொருள் எண் 7

பொருள்: மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகள்- வாடகை கட்டிடங்கள் - 2009-10ம் ஆண்டிற்கு வாடகை தொகை – உரிமையாளருக்கு – வழங்குவது - தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகளில் மாநகராட்சி சிங்காநல்லூர் தெற்கு ஆரம்பப்பள்ளி யோடு - மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு ஆரம்பப்பள்ளியை இணைப்பது தொடர்பாக - மன்றத்தின் ஒப்புதல் பெறுவது – சார்பாக.

------------------

26-11.2009-ம் நாளிட்ட கல்விக்குழு தீர்மான எண்.17-ல் ஒப்புதல் பெறப்பட்ட மாநகராட்சியின் சொந்த கட்டிடம் அல்லாத தனியார் கட்டிங்களில் இயங்கி வரும் சிங்காநல்லூர் பகுதியில் உள்ள மாநகராட்சியின் கீழ்காணும் 2 பள்ளிகளுக்கு 2009-10-ம் ஆண்டில் (ஏப்ரல் முதல் மார்ச் வரை) ஓர் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.60,144/- (ரூபாய் அறுபது ஆயிரத்து நூற்றி நாற்பது நான்கு மட்டும்) கட்டிட உரிமையாளருக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட கல்விக்குழுவின் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாதம் தோறும் வழங்கப்படும் வாடகை | ஓராண்டிற்கு | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் (கிழக்கு) ஆரம்பப்பள்ளி | ரூ. 2,683/- | ரூ. 31,596/- | தலைவர் சிங்காநல்லூர் ஆதிதிராவிடர் சமூக சங்க அறக்கட்டளை |
| 2. | சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளி | ரூ.2,379/- | ரூ. 28,548/- | செயலாளர் அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம், சிங்காநல்லூர் |
| | மொத்தம் | ரூ. 5,012/- | ரூ. 60,144/- | - |

மாமன்ற தீர்மான எண். 155 நாள் 29-12-2009 ல் கல்வி, பூங்காக்கள் குழுவின் ஆய்விற்கு பிறகு மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க முடிவு செய்யப்பட்டது.

28-1-2010ம் நாளிட்ட கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தலைவர் அவர்கள் வழங்கிய அறிக்கையில் மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு ஆரம்பப்பள்ளி பழைய ஓட்டுக் கூரை வேய்ந்த வீட்டில் செயல்பட்டு வருகிறது. இரண்டு அறைகளும், ஒரு கூடம் (Hall) உள்ளது. 55 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியருக்கு சிறுநீர் கூடங்கள் மற்றும் கழிப்பறைகள் இல்லை. விளையாட்டு மைதானம் இல்லை சத்துணவு மையம் சாலைக்கு வடக்கு பகுதியில் செயல்பட்டு வருகிறது.

மாநகராட்சி சிங்காநல்லூர் தெற்கு ஆரம்பப்பள்ளி பழைய ஓட்டுக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இரண்டு கூடங்கள் மட்டுமே உள்ளன. 49 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். பள்ளியில் ஆசிரியர்களுக்கென கழிவறைகள் உள்ளது. மாணவர்களுக்கு கழிவறைகள் இல்லை. மாணவர்களுக்கு சிறுநீர் கழிப்பிடம் உள்ளது. விளையாட்டு மைதானம் இல்லை. பள்ளியில் சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது.

மேற்படி இரு பள்ளிகளும் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. இரு பள்ளிகளுக்கும் இடையே உள்ள தொலைவு சுமார் ½ கிலோ மீட்டருக்கும் குறைவு.

எனவே மாநகராட்சி சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளியோடு மாநகராட்சி சிங்காநல்லூர் (கிழக்கு) ஆரம்பப்பள்ளியை இணைப்பதை பரிசீலனை செய்யலாம் என வழங்கியுள்ளது.

எனவே 2009-10 ம் (ஏப்ரல் முதல் மார்ச் வரை ) கல்வியாண்டிற்கு தனியார் கட்டிடங்களில் இயங்கும் மாநகராட்சி பள்ளிகளுக்கு ரூ..60,144/- (ரூபாய் அறுபது ஆயிரத்து நூற்றி நாற்பது நான்கு மட்டும்) வாடகையாக கட்டிட உரிமையாளருக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

2010-11 –ம் கல்வியாண்டு முதல் மாநகராட்சி சிங்காநல்லூர் தெற்கு ஆரம்பப்பள்ளியோடு மாநகராட்சி சிங்காநல்லூா கிழக்கு ஆரம்பப்பள்ளியை இணைப்பது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u> -

1. 2009-10 ம் (ஏப்ரல் முதல் மார்ச் வரை ) கல்வியாண்டிற்கு தனியார் கட்டிடங்களில் இயங்கும் மாநகராட்சி பள்ளிகளுக்கு ரூ..60,144/- (ரூபாய் அறுபது ஆயிரத்து நூற்றி நாற்பது நான்கு மட்டும்) வாடகையாக கட்டிட உரிமையாளருக்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. 2010-11 –ம் கல்வியாண்டு முதல் மாநகராட்சி சிங்காநல்லூர் தெற்கு ஆரம்பப்பள்ளியோடு மாநகராட்சி சிங்காநல்லூர் கிழக்கு ஆரம்பப்பள்ளியை இணைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பத்தி 1 மற்றும் 2 ஒப்புதலுக்காக.

ந.க.எண். 1796/2008/கே 14

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.267 நாள்.12.3.2010</u>

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்க தீர்மானிக்கபட்டது

---

## பொருள் எண் 8

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நீரேற்று நிலையம், நீரேற்ற பிரதான குழாய், சுத்திகரிப்பு நிலையம், மேல்நிலைத் தொட்டி மற்றும் பிரதான குழாயில் அமைக்கப்படவுள்ள வால்வுகள் உள்ளிட்ட குடிநீர் திட்டத்தின் அனைத்து இயக்கங்களையும் கணினி மூலம் இயங்கச் செய்தல், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தன்மை, குடிநீரின் அளவு மற்றும் அழுத்தம் ஆகியவற்றை கணினி மூலம் ஒரே சீராக பராமரிக்கும் முறையினை (Supervisory Control And Data Acquisition - SCADA) செயல்படுத்த முன்மொழிவுகள் கடந்த 17.11.09—ல் அனுப்பியதின் பேரில் 2010—11ம் ஆண்டின் பகுதி – II (Part - II) திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களால் அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூபாய் இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூபாய் இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | பில்லூர் II குடிநீர் திட்டப்பணி, பில்லூர் அணைப்பகுதி நீரேற்று நிலையம் முதல் இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலை தொட்டி வரையில் கணினி மூலமாக இயக்கி பராமரித்து புள்ளி விவர தொகுப்புகை பணி (Supervisory Control And Data Acquisition - SCADA) | **600.00** | **400.00** | **200.00** |

மேற்கண்ட பணிக்காக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நிதி தவிர கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் கோரி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) பில்லூர் IIவது குடிநீர் திட்ட பணிகள், பில்லூர் அணைப்பகுதியில் அமைக்கப்படவுள்ள நீரேற்று நிலையம் முதல் இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை தொட்டி வரையில் தானியங்கி கணினி முறையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளையும் (Supervisory Control And Data Acquisition - SCADA) புள்ளி விபர தொகுப்புகளையும் செய்திட ஆகும் செலவினம் ரூ. 600 லட்சத்தில் அரசால் அனுமதிக்கப்படவுள்ள ரூ. 400 லட்சத்திற்கும் கூடுதலாகும் தொகையினை மாநகராட்சி பங்கு நிதியாக ரூ.200 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது குடிநீர் திட்டத்திலிருந்தோ செலவழித்து பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி திட்டத்தை செயல்படுத்த தேவையான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீட்டினை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினை பணியமர்த்தி திட்ட அறிக்கை தயாரிக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 1468/09/ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.268 நாள்.12.3.2010</u>

அலுவலகக் குறிப்பு ‘அ’ மற்றும் ‘ஆ’ அனுமதிக்கப்பட்டது

--------------------------------------------------------------------------------

## பொருள் எண் 9

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது குடிநீர்த் திட்டம் ரூ. 113.74 கோடி செலவிலும், ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் ரூ. 377.13 கோடி செலவிலும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

இவ்விரு திட்டங்களில் வழிவகை செய்யப்படாமல் உள்ள பில்லூர் IIவது குடிநீர் திட்ட சுத்திகரிப்பு நிலையத்தினை சுற்றிலும் பாதுகாப்புக்கென சுற்றுச்சுவர்கள், குடிநீர் திட்ட செயலாக்கத்திற்கு நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் குடியிருக்க தேவையான குடியிருப்புகள் மற்றும் இராமகிருஷ்ணாபுரத்தில் கட்டப்பட்டு வரும் பிரதான மேல்நிலை தொட்டி இடம் பாதுகாக்கப்படும் இடமானதால் அப்பகுதியினை சுற்றிலும் சுற்றுச்சுவர்கள், காவலர் அறை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் சேகரம் செய்து வெளியேற்ற தேவையான சேகரிப்பு கிணறு மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்களுக்கு 48 எண்ணிக்கையிலான அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகளுக்கு தேவைப்படும் நிதியினை முழுமையாக மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது திட்ட நிதியிலிருந்தோ செலவழிக்க இயலாது.

எனவே மாநில அரசின் உள்கட்டமைப்பு பணிகளால் நிதி பற்றாக்குறையினை ஈடு செய்யும் நிதியிலிருந்து கீழ் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சிகளில் நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு கடந்த 24.07.2009 அன்று பிரேரனைகள் அனுப்பப்பட்டதின் பேரில், நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது ந.க.எண்.39618/2009/L.A.3 29.01.2010ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு மானிய நிதி மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்தும், மாநகராட்சி தனது பங்கு நிதியாக ரூ.179 இலட்சம் செலவழித்தும் பணியினை மேற்கொள்ள தெரிவித்து உத்திரவிட்டுள்ளதின்படி இப்பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

உள்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதி
**(Infrastructure Gap Filling Fund 2009-2010)**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூபாய் இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளியங்காடு 125 எம்.எல்.டி கொள்ளளவு நிலையத்தில் பணியாளர்கள் குடியிருப்புகள் மற்றும் சுற்றுச்சுவர் சுவர் கட்டும் பணி | 149.00 | 135.00 | 14.00 |
| 2 | இராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான மேல்நிலை (MSR) தொட்டியில் சுற்றுச்சுவர் கட்டுதல். | 45.00 | 30.00 | 15.00 |
| 3 | உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகரிப்புக் கிணறு அமைத்தல் | 75.00 | 75.00 | இல்லை |
| 4 | பீளமேட்டில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல். (48 குடியிருப்புகள்) | 300.00 | 150.00 | 150.00 |
| | மொத்த தொகை | 569.00 இலட்சம் | 390.00 இலட்சம் | 179.00 இலட்சம் |

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

அ) நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களால் 2009-2010 ம் ஆண்டிற்கான ( Infrastructure Gap Filling Fund ) நிதி ஒதுக்கீடு தொகையான ரூ. 390.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பங்குத் தொகையான ரூ. 179.00 இலட்சம் செலவழிக்க மாமன்றம் ஒப்புதல் அளித்து பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட மொத்த பணிகளுக்கு ஆகும் மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ. 569.00 இலட்சத்தில் அரசால் விடுவிக்கப்படும் மானியத் தொகை ரூ. 390.00 இலட்சத்திற்கும் கூடுதலாக உள்ள தொகையான ரூ. 29.00 இலட்சத்தினை வரிசை எண் 1, 2 பணிகளுக்கு மாநகராட்சி குடிநீர் திட்ட தொகையிலிருந்தும், வரிசை எண் 4 பணிக்கு மாநகராட்சியின் பங்கு நிதியான ரூ. 150.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதி அல்லது பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தும் பணிகளை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 7504 /09 / ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.269 நாள்.12.3.2010</u>

அலுவலகக்குறிப்பு 'அ' மற்றும் 'ஆ' அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோவை மாநகராட்சியில் தற்போது இயக்கத்தில் உள்ள பில்லூர் குடிநீர்த் திட்டம் பகுதி I ன் கீழ் பதிக்கப்பட்டுள்ளதும், இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து பிற பகுதிகளுக்கு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

இதில் பீளமேடு மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் பகுதிகள் அடங்கிய வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதி, 11 பகுதி மற்றும் வார்டு எண் 16 பகுதிகளில் குடிநீர் வழங்க பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான ஏ.சி. குழாய்கள் நகரில் ஏற்படும் மின் தடையினாலும் மற்றும் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் ஏற்படும் மின் தடையினாலும் குடிநீர் அழுத்தம் மாறுபட்டு அடிக்கடி உடைப்பு ஏற்படுவதுடன், பிரதான குழாய்களில் கசிவுகளும் ஏற்படுவதால் மேற்குறிப்பிட்ட வார்டுகளில் கடந்த 10 ஆண்டுகளாக ஒரே சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. மேலும் மேற்கண்ட வார்டுகளில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ மனைகள் உள்ளதால் அதற்கான குடிநீர் விநியோகமும் சப்ளை செய்ய வேண்டியுள்ளது.

பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் கிடைக்கப்பெற உள்ள கூடுதல் குடிநீரும் இப்பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் சீரான விநியோகம் செய்ய ஏதுவாக தற்போது அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் 450 மற்றும் 500 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. குழாய்களுக்கு பதிலாக 900 முதல் 1000 மி.மீ விட்டமுள்ள M.S. / D.I. குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது.

இப்பணியினை மாநில அரசின் "இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிதி" திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் கடந்த 24.07.2009 ல் அனுப்பப்பட்டதின் பேரில், நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது ந.க.எண்.39618/2009/L.A.3 29.01.2010ம் தேதிய கடிதத்தில் கீழ்குறிப்பிட்டுள்ளபடி மானிய நிதி ஒதுக்கீடு செய்யும் மாநகராட்சி பங்கு நிதியாக ரூ.256.00 இலட்சம் செலவழித்து பணியினை மேற்கொள்ள உத்திரவிட்டுள்ளதின்படி இப்பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதி
**(O & M Gap filling fund 2009 - 2010)**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூபாய் இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | கணபதி பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து சிங்காநல்லூர் வரையிலான பிரதான குழாய் மெயின் 500 / 400 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. குழாயினை 900/1000 விட்டமுள்ள M.S / DI குழாயாக மாற்றும் பணி | 700.00 | 444.00 | 256.00 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 2009 – 2010 ம் ஆண்டிற்கான (Operating and Maintenance filling fund) நிதி ஒதுக்கீடு தொகையான ரூ. 444.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பங்குத் தொகையான ரூ. 256.00 இலட்சம் செலவழித்தும் பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் அளித்து கடிதத்தினை பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்குண்டான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ. 700 இலட்சத்தில் அரசால் விடுவிக்கப்படும் மானியத்தொகை ரூ. 444.00 இலட்சத்துடன் மாநகராட்சி பங்குத் தொகையான ரூ. 256.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதி அல்லது பொது நிதியிலிருந்து செலவழித்து, இப்பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 7504 / 09 / ஜே.எண். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.270 நாள்.12.3.2010</u>

அலுவலகக்குறிப்பு ‘அ’ மற்றும் ‘ஆ’ அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம். ரூ. 377.13 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஆணை (3டி) எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–3) துறை நாள்: 24.10.2007–மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் II பகுதி பணியின் விபரம்:

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | திருத்திய தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| II | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – III மற்றும் VII- கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.5796.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 40 / 2009–10 நாள் 22.09.09 |

இப்பணிக்கு நான்காவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், கடந்த 20.11.2009–ல் கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. SEW-AIPPL, (JV), Hyderabad,**
   (தி/ள். எஸ்.இ.டபிள்யூ – ஏ.ஐ.பி.பி.எல், (ஜே.வி), ஐதராபாத்)

2. **M/s. Deepika – Angel (JV), Hyderabad.**
   (தி/ள். தீபிகா – ஏஞ்சல் (ஜே.வி), ஹைதராபாத்)

3. **M/s. KRR Infra Projects (P), Ltd., Hyderabad.**
   (தி/ள். கே.ஆர்.ஆர். இன்ப்ரா புராஜெக்ட்ஸ் (பி) லிட், ஹைதராபாத்)

மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியினை மாநகராட்சியின் ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழுவின் (Technical Standing Committee) ஆய்விற்கு அனுப்பப்பட்டது. கடந்த 19.02.2010–ல் நடைபெற்ற மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வு குழு கூட்டத்தில் மேற்படி மூன்று நிறுவனங்களில் தி/ள். SEW – AIPPL (JV) நிறுவனம் மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றது என உறுதி செய்யப்பட்டதால், 02.03.2010–ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) திறக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | நிறுவனம் வழங்கிய ஒப்பந்தவிலைப்புள்ளி விபரம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக் கு (கூடுதல்) சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு/ள். எஸ்.இ.டபிள்யூ – எ,ஐ,பி,பி,எல், (ஜே.வி) ஐதராபாத். | ரூ.48,18,12,262.29 | ரூ. 56,12,87,097.30<br>இந்நிறுவனம் விலை குறைப்பு செய்து 03.03.10ல் சம்மத கடிதம் வழங்கிய பின் ஒப்பந்தவிலைப்புள்ளி தொகை<br>ரூ. 56,12,50,000.00 | 16.495%<br><br>16.487% |

மேற்கண்ட ஒப்புநோக்கு பட்டியலின்படி, ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான திரு/ள். எஸ்.இ.டபிள்யூ – எ.ஐ.பி.பி.எல் (ஜே.வி), ஐதராபாத், நிறுவனத்திடம் நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் விதி எண். 2.8–ன் படி விலைகுறைப்பு செய்திட கடந்த 02.03.10 ல் கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைக்குறைப்புக்கு பின்னர், திரு/ள். எஸ்.இ.டபிள்யூ – எ.ஐ.பி.பி.எல் (ஜே.வி), ஐதராபாத், என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 16.487% கூடுதலாக உள்ளதால் மேலும் விலைக்குறைப்பு செய்திட 03.03.10ல் கோரப்பட்டதில், விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்து 04.03.2010ல் கடிதம் வழங்கியுள்ளனர், மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணிக்கு நான்காம் முறையாக 20.11.2009–ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பட்ட ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற திரு/ள். எஸ்.இ.டபிள்யூ – எ.ஐ.பி.பி.எல் (ஜே.வி), ஐதராபாத், என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி முதல் விலைக்குறைப்பிற்கு பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகையினை விட, 16.487% சதவீதம் கூடுதலாக உள்ளதால், அரசு அரசாணை எண்.34 ந.நி. மற்றும் கு.வ துறை நாள்: 22.03.2006–ன் படி 5% சதவீதத்திற்கு கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு செய்ய "மாநில அளவிலான ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு" அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி குழுவின் பரிசீலனைக்கு இவ்வொப்பந்தப்புள்ளியினை அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகையில் இந்த சிப்பப் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கும் 16.487% சதவீதம் கூடுதலாக இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள நிலையில் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1468/09/ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.271 நாள்.12.3.2010</u>

**அ) நான்காம் முறையாக 20.11.2009ல் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி E-டென்டரிங் முறையில் கோரப்பட்டதில், வரப்பட்ட மூன்று ஒப்பந்த விலைப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒரு நிறுவனமான தி/ள்.எஸ்.இ.டபின்யூ-எ.பி.பி.எல்(ஜே.வி) ஐதராபாத் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி விலைக் குறைப்பதற்கு பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகையினை விட 16.4.87% சதவீதம் கூடுதலாக உள்ளதால், இவ்வொப்பந்த விலைப்புள்ளியினை "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**ஆ) அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினை விட இந்த சிப்பப் பணி மேற்கொண்டால் ஆகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 12

### <u>உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்</u>

கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள அவினாசி சாலையில் நஞ்சப்பா சாலையின் தொடக்கம் முதல் சித்ரா (விமான நிலையம் சந்திப்பு) வரையிலான புதிதாக விரிவுபடுத்தப்பட்ட ஆறு வழிச்சாலையின் நடுவே எட்டு பட்டையுடன் கூடிய தனித்த 275 எண்ணிக்கை மின்கம்பங்களுடன் கூடிய 2x250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் எட்டு உயர்மட்ட மின் கோபுர மின்விளக்குகள் (2x400 வாட்ஸ்) புதிதாக அமைக்க மாமன்றத் தீர்மான எண்.7 நாள்:22-06-09-ன் படி மதிப்பீடு ரூ.3.00 கோடிக்கு அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு பிரரேணை அனுப்பப்பட்டது. இப்பிரேரணையை பரிசிலனை செய்த பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் இப்பணிக்கான மதிப்பீடு ரூ.3.00 கோடிக்கான நிர்வாக அனுமதியை 08-10-2009 அன்று வழங்கியுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக இயக்குனரக தலைமைப் பொறியாளர் அவர்கள் 15-12-2009 அன்று இப்பணிக்கான தொழில் நுட்ப அனுமதியை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் (**E-Tendering**) முறையில் முதன் முறையாக 22-01-2010 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

1. திருவாளர்கள் சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை-53
2. திருவாளர்கள் பஜாஜ் எலக்ட்ரிகல்ஸ் லிட், சென்னை-29
3. திருவாளர்கள் ஒரியன்ட் போல்ஸ், சென்னை-42
4. திருவாளர்கள் சன்மேக் என்டர்பிரைசஸ், கோவை-36
5. திருவாளர்கள்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி & கோ, ஈரோடு-1

பெறப்பட்ட இந்த ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்த பின்னர் வரிசை எண்.5-ல் உள்ள நிறுவனம் தகுதியற்றது என கண்டறிந்து மீதமுள்ள வரிசை எண்.1 முதல் 4 வரையிலான நான்கு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளையும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப தலைமைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட இந்த நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதியை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப தலைமைக்குழு பரிசீலனை செய்த பின்னர் கீழ்கண்ட இரு நிறுவனங்கள் மட்டுமே தகுதியானவை எனக் கண்டறிந்து கோவை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் தலைமையின்கீழ் ஒருகுழு அமைத்து இவ்விரு நிறுவனங்களின் தெரு விளக்குகள், கம்பங்கள் மற்றும் பிட்டிங்குகள் ஆகியவற்றின் மாதிரிகளை ஆய்வு செய்த பின்னர் இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகளை திறந்து முடிவு செய்யலாம் என அனுமதி வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கீழ்கண்ட ஆய்வுக்குழு.்். ஆணையாளர் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது.

1. உதவி ஆணையாளர் (கணக்கு)
2. கண்காணிப்பு பொறியாளர் (JNNURM)
3. மாநகரப்பொறியாளர்
4. நிர்வாக பொறியாளர் (மேற்கு)
5. நிர்வாக பொறியாளர் (கிழக்கு)
6. நிர்வாக பொறியாளர் (JNNURM)
   மற்றும் உதவி ஆணையாளர் (தெற்கு) (பொ)
7. உதவி செயற்பொறியாளர் (வடக்கு)
8. உதவி செயற்பொறியாளர் (கிழக்கு)
9. உதவி செயற்பொறியாளர் (தெற்கு)
10. உதவி செயற்பொறியாளர் (மேற்கு)

மேற்கண்ட குழு இந்த நிறுவனங்களின் தெரு விளக்குகள், கம்பங்கள் மற்றும் பிட்டிங்குகள் ஆகியவற்றின் மாதிரிகளை 25-02-2010 அன்று ஆய்வு செய்த பின்னர் இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகளை திறந்து முடிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்த இரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 01-03-2010 அன்று திறக்கப்பட்டன.

1. திருவாளர்கள் சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை-53 அவர்கள் ரூ.2,78,69,553/- விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.
2. திருவாளர்கள் ஓரியன்ட் போல்ஸ், சென்னை-42 அவர்கள் ரூ.2,87,75,840/- விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

எனவே குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை-53 நிறுவனத்தை மேலும் விலைகளை குறைத்துக் கொடுக்க கேட்கப்பட்டதில் இந்நிறுவனத்தினர் 02-03-2010 அன்று முன்பு கொடுத்துள்ள விலைப்புள்ளியான ரூ.2,78,69,553/- லிருந்து ரூ.2,76,13,753/- ஆக (மதிப்பீட்டிற்கு 4.98% அதிகம்) குறைத்து கொடுத்துள்ளனர்.

எனவே மதிப்பீட்டிற்கு 4.98% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை-53 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். இப்பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 6121/2009/(எம்.டி.3) எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.272 நாள்.12.3.2010</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 13

**<u>உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அபிவிருத்தி பணிகள்</u>**

**கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள திருச்சி சாலையை தற்பொழுது நான்கு வழித்தடமாக மாற்றி புதியதாக சாலை விரிவாக்கப் பணி நடைபெற்று வருகிறது. எனவே, இச்சாலையில் பங்கு பரிவர்த்தனை மையம் தொடக்கம் முதல் ஒண்டிபுதூர் மேம்பாலம் வரை புதியதாக சாலையின் மைய பகதியில் 151 எண்ணிக்கையில் 10மீ உயரமுள்ள எட்டு பட்டையுடன் கூடிய 2 x 250 வாட்ஸ் கொண்ட சோடியம் ஆவிவிளக்குகள் மற்றும் 5 எண்ணிக்கையில் 16மீ உயரமுள்ள உயர் மட்ட கோபுர (2 x 400 வாட்ஸ்) சோடியம் ஆவிவிளக்குகள் புதியதாக அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ. 1.80 கோடிக்கு மாமன்றத் தீர்மான எண்.122 நாள் 30.11.2009-ன் படி அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டது.**

இப்பிரேரணையை பரிசீலனை செய்த பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் இப்பணிக்கான மதிப்பீடு 1.80 கோடிக்கு நிர்வாக அனுமதியை 17.12.2009 அன்று வழங்கியுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்கள் 31.12.2009 அன்று இப்பணிக்கான தொழில்நட்ப அனுமதியை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் (E-Tendering) முறையில்முதல் முறையாக 28.01.2010 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளார்கள்.

1. தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை - 53.
2. தி/ள் ஓரியன்ட் போல்ஸ், சென்னை - 42.
3. தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ், கோவை - 36.
4. தி/ள் பஜாஜ் எலக்ட்ரிக்கல்ஸ், கோவை - 29.

பெறப்பட்ட இந்த நான்கு ஒப்பந்தப்புள்ளிகளையும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்த பின்னர் வரிசை எண்.4-ல் உள்ள நிறுவனம் தகுதியற்றது என கண்டறிந்து மீதமுள்ள வரிசை எண்.1 முதல் 3 வரையிலான மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளையும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில் நுட்ப தலைமைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட இந்த நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதியை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப தலைமைக் குழு பரிசீலனை செய்த பின்னர் கீழ்கண்ட இரு நிறுவனங்கள் மட்டுமே தகுதியானவை எனக் கண்டறிந்து கோவை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு குழு அமைத்து இவ்விரு நிறுவனங்களின் தெருவிளக்குகள், கம்பங்கள் மற்றும் பிட்டிங்குகள் ஆகியவற்றின் மாதிரிகளை ஆய்வு செய்த பின்னர் இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகளை திறந்து முடிவு செய்யலாம் என அனுமதி வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட ஆய்வுக்குழு, ஆணையாளர் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது.

1. உதவி ஆணையாளர் (கணக்கு)
2. கண்காணிப்பு பொறியாளர் (JNNURM)
3. மாநகரப் பொறியாளர்
4. நிர்வாகப் பொறியாளர் (மேற்கு)
5. நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு)
6. நிர்வாகப் பொறியாளர் (JNNURM) மற்றும் உதவி ஆணையாளர் (தெற்கு) (பொறுப்பு)
7. உதவி செயற்பொறியாளர் (வடக்கு)
8. உதவி செயற்பொறியாளர் (கிழக்கு)
9. உதவி செயற்பொறியாளர் (தெற்கு)
10. உதவி செயற்பொறியாளர் (மேற்கு)

மேற்கண்ட குழு இந்த நிறுவனங்களின் தெருவிளக்குகள், கம்பங்கள்மற்றும் பிட்டிங்குகள் ஆகியவற்றின் மாதிரிகளை 25.02.2010 அன்று ஆய்வு செய்த பின்னர் இவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகளை திறந்து முடிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்த இருநிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 01.03.2010 அன்று திறக்கப்பட்டன.

1. தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை அவர்கள் ரூ. 1,58,74,803/- விலைப்புள்ளி கொடுத்துள்ளார்.

2. தி/ள் ஓரியன்ட் போல்ஸ், சென்னை அவர்கள் ரூ. 1,64,17,590/- விலைப்புள்ளி கொடுத்துள்ளார்.

எனவே, குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை-53 நிறுவனத்தை மேலும் விலைகளைக் குறைத்து கேட்கப்பட்டதில் இந்நிறுவனத்தினர் 02.03.2010 அன்று முன்பு கொடுத்துள்ள விலைப்புள்ளியான ரூ. 1,58,74,803/- லிருந்து ரூ. 1,57,78,163/- ஆக (மதிப்பீட்டிற்கு 4.99% அதிகம்) குறைத்து கொடுத்துள்ளனர்.

னவே, மதிப்பீட்டிற்கு 4.99% அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை-53 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். இப்பணி குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.14854 / 2009 / (எம்.டி.3) எம்.டி.2.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.273 நாள்.12.3.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

<u>பொருள் எண் 14</u>

தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண் TNPCB / SWM / MSW /22842 /CBE/Complt/10 நாள் 22-02-2010-ல் தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறையின் மாண்புமிகு அமைச்சர் கடந்த 11-02-2010 அன்று கோயம்புத்தூர் மாநகரில் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட வார்பட மற்றும் முலாம் பூச்சுத் தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுவினை கட்டுப்படுத்துவதனை பற்றிய கருத்தரங்கில் கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜுன் 2010 ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் போது கோயம்புத்தூர் மாநகரினை பிளாஸ்ட்டிக் இல்லா நகராக உருவாக்க முயற்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை அவர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொண்டதில் திருநெல்வேலி மாநகராட்சியில் ஒரு முறையே உபயோகத்திற்கு பயன்பெறும் பிளாஸ்டிக் கழிவுகளை அம்மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படை செய்து அவற்றினை கழிவு செய்யப்பட்டு வருவதாகவும் அதே நடைமுறையினை பின்பற்றி கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தியாகும் ஒரு முறையே உபயோகத்திற்கு பயன்பெறும் பிளாஸ்டிக் கழிவுகளை இம்மாவட்டத்தில் அமைந்துள்ள சிமெண்ட் உற்பத்தி நிறுவனமான தி/ள். ஏ.சி.சி.லிமிடெட், மதுக்கரை நிறுவனத்திற்கு மேற்படி தரம் பிரிக்கப்பட்ட ஒரு முறையே உபயோகத்திற்கு பயன்பெறும் பிளாஸ்டிக் கழிவுகளை ஒப்படை செய்து அவற்றினை கழிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

எனவே வரும் ஜுன் 2010 ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் போது கோயம்புத்தூர் மாநகரினை பிளாஸ்டிக் இல்லா நகராக உருவாக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தியாகும் ஒரு முறையே உபயோகத்திற்கு பயன்பெறும் பிளாஸ்டிக் கழிவுகளை இம்மாவட்டத்தில் அமைந்துள்ள சிமெண்ட் உற்பத்தி நிறுவனமான தி/ள். ஏ.சி.சி.லிமிடெட், மதுக்கரை நிறுவனத்தாருடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) மேற்கொண்டு அவற்றினை கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 2266/2010/ஜே.என்.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.274 நாள்.12.3.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அவினாசி சாலையின் இருபுறமும் 3.00 மீட்டர் அகலத்திற்கு மேற்பட்ட சாலை ஓரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியார் பங்களிப்புடன் அமைத்தல் மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) மூன்று சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தல் - தொடர்பாக

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற இருப்பதால் அவினாசி சாலையில் நடைபாதை அமைக்கவும் மற்றும் சாலையோர பூங்காக்கள் தனியார் பங்களிப்புடன் அமைக்கவும் மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் திரும்ப ஓப்படைத்தல் பணிகளுக்கு விருப்பு கேட்பு அறிக்கை கோர மாமன்ற தனது தீர்மான எண் 224 நாள் 29-01-2010-ல் தீர்மானிக்கப்பட்டது

சாலையின் இருபுறமும் தடுப்பு சுவர், நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்கள் அமைத்தல் பணிக்கு 16.02.2010ல் விருப்பு கேட்பு அறிக்கை கோரியதில் கீழ்கண்டவாறு விருப்பு கேட்பு அறிக்கை பெறப்பட்டது

| நிறுவனத்தின் பெயர் | அவினாசி சாலை வடக்கு அண்ணாசிலை முதல் ரெசிடன்சி ஹோட்டல் வரை சிப்பம் I ஒரு வருடத்திற்கு | அவினாசி சாலை தெற்கு நில்கிரிஸ் முதல் காமராஜ் சாலை வரை சிப்பமII ஒரு வருடத்திற்கு | அவினாசி சாலை வடக்கு GKNM முதல் லட்சுமி மில் வரை சிப்பம்III ஒரு வருடத்திற்கு | அவினாசி சாலை வடக்கு திருப்பூர் டெக்ஸ்டைஸ் பாலம் முதல் PKD நகர் வரை சிப்பம்IV ஒரு வருடத்திற்கு | அவினாசி சாலை வடக்கு மற்றும் தெற்கு ஐ.டி பூங்கா முதல் காளப்பட்டி சாலை வரை சிப்பம்V ஒரு வருடத்திற்கு |
|---|---|---|---|---|---|
| 1)தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ் சென்னை | ரூ 5,04,000/- | ரூ12,50,000/- | ரூ4,50,000/- | ரூ6,30,000/- | ரூ24,50,000/- |
| 2)தி/ள் மெட்ரோ மல்டிமிடியா பிரைவேட் லிட் சென்னை | ரூ3,92,000/- | ரூ5,18,000/- | ரூ3,02,000/- | ரூ3,02,000/- | ரூ1,25,000/- |
| 3) தி/ள் மார்க்-1 கம்யூனிக்கேசன் சென்னை | ரூ1,04,000/- | ரூ2,75,000/- | ரூ90,000/- | ரூ1,25,000/- | ரூ4,10,000/- |
| 4)தி/ள் வாண்டேஜ் அடவர்டைசிங் பிரைவேட் லிட் சென்னை | - | ரூ1,44,000/- | - | - | - |
| 5) தி/ள் முகில் மிடியா நாமக்கல் | ரூ2,00,000/- | - | - | ரூ2,00,000/- | - |

பெறப்பட்ட ஐந்து விருப்ப கேட்பு அறிக்கைகளில் தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ் சென்னை நிறுவனத்தார் சிப்பம்-I, II, III, IV மற்றும் V ஆகிய ஐந்து சிப்பங்களுக்கும் அதிகபட்ச தொகை கோரியுள்ளனர். விருப்பு கேட்பறிக்கை நிபந்தனைகளின்படி ஓர் நிறுவனம் ஐந்து சிப்பங்களுக்கும் அதிகபட்ச தொகை கோரியிருந்தால் அந்நிறுவனம் ஐந்தில் ஏதாவது மூன்று சிப்பங்களை அவரது விருப்பத்திற்கு தேர்வு செய்து மீதமுள்ள இரண்டு சிப்பங்களை ஒப்படை செய்ய வேண்டும். அவ்வாறு ஒப்படை செய்யப்படும் இரண்டு சிப்பங்களை அவருக்கு அடுத்தபடியாக அதிகபட்ச தொகை கோரியுள்ள நிறுவனத்தாரை மீதமுள்ள இரண்டு சிப்பங்களை முதலாவது நிறுவனத்தார் கோரியுள்ள அதிகபட்ச தொகையிற்கு ஒப்படை செய்யப்பட வேண்டும். அதனடிப்படையில் தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தார் அவர்களது 18-02-2010-ம் தேதிய கடிதத்தில் சிப்பம் I, II மற்றும் V ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று பணிகளை தேர்வு செய்துள்ளகாகவும் மீதமுள்ள III மற்றும் IV ஆகிய இரண்டு சிப்பங்களை ஒப்படை செய்யவதாக தெரிவித்துள்ளனர். சிப்பம் III மற்றும் IV ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள பணிகளை அவருக்கு அடுத்தபடியாக அதிகபட்ச தொகை கோரியுள்ள நிறுவனமான தி/ள் மெட்ரோ மல்டி மீடியா (பி) லிட், சென்னை விருப்ப கேட்பு அறிக்கை நிபந்தனைகளின்படி தகுதி பெறவில்லை.

எனவே சிப்பம் I, II மற்றும் V ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று சிப்பப்பணிகளை முதற்கட்ட நடவடிக்கையாக அதிகபட்ச தொகை கோரியுள்ள தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு முறையே ரூ.5,04,000/-, ரூ.12,50,000/- மற்றும் ரூ.24,50,000/- வீதம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பரப்பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிக்கப்பட்டுள்ளவாறு மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் காலநீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் வழங்கலாம். மீதமுள்ள இரண்டு சிப்பங்கலான III மற்றும் IV ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு குறுகிய கால அடிப்படையில் மறு விருப்ப கேட்பு அறிக்கை கோரலாம்.

எனவே கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற இருப்பதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு சிப்பம் I, II மற்றும் V ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று சிப்பப்பணிகளை முதற்கட்ட நடவடிக்கையாக அதிகபட்ச தொகை கோரியுள்ள தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கு முறையே ரூ.5,04,000/-, ரூ.12,50,000/- மற்றும் ரூ.24,50,000/- வீதம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பரப்பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிக்கப்பட்டுள்ளவாறு மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் காலநீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் வழங்கவும், மீதமுள்ள இரண்டு சிப்பங்கலான III மற்றும் IV ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு குறுகிய கால அடிப்படையில் மறு விருப்ப கேட்பு அறிக்கை கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 15293/2009/MD2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.275 நாள்.12.3.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி